**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கமுதி.**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**குற்றவியல் நடுவர். கமுதி**

**2026 ம் வருடம் மே திங்கள் 26 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

குற்றவியல் பல்வகை மனு எண். 176/2026

in

CC.No. 131/2021

சுந்தர் (24/22),
த/பெ. சின்னச்சாமி,
கீழமுடிமன்னார்கோட்டை,
கமுதி தாலுகா. ... மனுதாரர்/2 ம் எதிரி

//எதிராக//

தமிழக அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
கமுதி காவல் நிலையம்,
இராமநாதபுரம் மாவட்டம்
குற்ற எண்.352/2022
U/s.294(b), 506(2), 326 IPC ... எதிர்மனுதாரர்
/குற்றமுறையிடுபவர்.

இம்மனுவானது மனுதாரர்/2 ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.இராமநாதன், B.A.,B.L., அவர்களும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை – 1 திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி அவர்களும் முன்னிலையாகி வாதிட்டதின் பேரில் இரு தரப்பு வாதங்களையும் உரிய கவனத்துடன் கேட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்......

**உத்தரவு**

மனுதாரர்/எதிரி தரப்பில் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹீதா பிரிவு 480 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுதார்/2 ம் எதிரி இவ்வழக்கின் 1 ம் எதிரியுடன் சேர்ந்து மது போதையில் வாதியைப் பார்த்து அசிங்கமாக பேசி, செங்கல்லால் தலை, வாய், நெற்றி, உதடு ஆகிய இடங்களில் தாக்கி இரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டிய வழக்கில் கமுதி காவல்நிலைய

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 17:18:55 +0530

குற்ற எண். 352/2022 இதச பிரிவுகள் 294(பி), 326, 506(2)–ன் கீழ் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கானது சி.சி எண்.131/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் வழங்குவதற்காக நிலுவையில் வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் 2ம் எதிரியின் வருகையின்மையால் 2ம் எதிரிக்கு எதிராக பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குற்றமுறையிடுவோரால் 23.05.2026ம் தேதி 2ம் எதிரி கைது செய்யப்பட்டு பிடிகட்டளை நிறைவேற்றம் செய்யப்பட்டு 2ம் எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

3. மனுதாரர் வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது. அவர் தன்னுடைய வாதத்தில் மனுதாரர் மீது இதச பிரிவுகள் 294(பி), 326, 506(2) ன் படி கடந்த 23.05.2026ம் தேதி குற்றமுறையிடுவோரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டதாகவும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றும், எதிரி வேலைக்காக வெளியூர் சென்ற காரணத்தினால் வாய்தாக்களுக்கு ஆஜராக இயலவில்லை என்றும், எதிரி வேண்டுமென்றே நீதிமன்ற உத்தரவை மீறவில்லை என்றும், இனி வரும் வாய்தாக்களுக்கு எதிரி தவறாமல் ஆஜராவர் என்றும், எதிரியை பிணையில் விடக்கோரி மனு தாக்கல் செய்து மனுதாரர்/எதிரியை பிணையில் விடும்படியும் கோரினார்.

4. காவல் துறையினர் பதில் மனுவில் எதிரியை பிணையில் விடுவித்தால் வழக்கு விசாரணைக்கு சரிவர ஆஜராகாமல் இருக்க வாய்ப்புள்ளது என்பதாலும், தலைமறைவாகி வழக்கு விசாரணையை தாமதப்படுத்தக்கூடும் என்றும் எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவித்துள்ளார். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரும இதே கருத்தை தெரிவித்துள்ளார்.

5. மனு, பதில் மனு, இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு ஆவணங்கள்

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 17:18:59 +0530

பரிசீலிக்கப்பட்டதில் வழக்கானது சி.சி.எண். 131/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் எதிரிகளுக்கு வழங்குவதற்காக நிலுவையில் இருந்து வருவதாலும், வழக்கின் எதிரியான மனுதாரர் கடந்த 23.05.2026 ம் தேதியன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு நாளது தேதி வரை நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். எதிரி அவரது வாழ்க்கை பிழைப்பிற்காக வேலை தேடி வெளியூர் சென்றுவிட்டதாக தெரிவித்துள்ளதைக் கருத்தில் கொண்டு, மனுதாரர்/எதிரி பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விட இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:–</u>

1. எதிரியின் இரு ஜாமீன்தாரர்களும் தலா ரூ.10,000/–த்திற்கு பிணைப்பத்திரம் எழுதித்தர வேண்டும்.

2. எதிரி/மனுதாரர் பிணையில் விடப்பட்ட நாளிலிருந்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலை 10.00 மணிக்கு கமுதி, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜராகி மறுஉத்தரவு வரும் வரை கையொப்பம் இடவேண்டும்.

3. இதுபோன்ற குற்ற செயல்களில் மீண்டும் மனுதாரர்கள் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனை பேரிலும்.

4. சாட்சிகளை கலைக்க எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளக்கூடாது. விசாரணை காலத்தில் ஒத்துழைக்க வேண்டும்.

5. நீதிமன்றத்தில் விசாரணைக்காக தவறாமல் ஆஜராக வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு (26.05.2026) இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 17:19:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.